இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 15-11-2025

# தகுதிப்படுத்தும் அரசு!

குடிமைப் பணித் தேர்வுக்கு மாணவர்களைத் தகுதிப்படுத்தும் அரசாக தமிழ்நாடு அரசு செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களும், துணை முதலமைச்சர் உதயநிதி அவர்களும் இதற்கு தனிக் கவனம் செலுத்தி வருகிறார்கள்.

ஒவ்வொரு ஆண்டும் அகில இந்திய குடிமைப்பணித் தேர்வுக்குத் தயாராகி வரும் ஆர்வலர்கள் மதிப்பீட்டுத் தேர்வு மூலம் 1,000 இளைஞர்கள் தேர்வு செய்யப்படுகிறார்கள். முதல்நிலைத் தேர்வுக்குத் தயாராவதற்கு ஒவ்வொரு மாணவருக்கும் 10 மாதங்களுக்கு மாதம் ரூ.7,500 வீதம் மொத்தம் ரூ.75,000 அரசு வழங்கி வருகிறது. முதல் நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்று முதன்மைத் தேர்வுக்குத் தயாராகும் மாணவர்களுக்கு, 25,000 ஊக்கத் தொகையாக அரசு வழங்கி வருகிறது. அகில இந்திய குடிமைப்பணித் தேர்வுப் பயிற்சி மையத்தில் தங்கிப் பயிலும் முதன்மைத் தேர்வுப் பயிற்சி மாணவர்களுக்கு ரூ.9,000 அரசு வழங்கி வருகிறது.

டெல்லியில் நடைபெறும் குடிமைப்பணி ஆளுமைத் தேர்வில் கலந்து கொள்ளும் ஆர்வலர்களுக்கு இதுவரை 5 ஆயிரம் ரூபாய் தரப்பட்டு வந்தது. அதனை 50 ஆயிரம் ஆக்கி உள்ளது அரசு. மதுரை, கோவையில் பயிற்சி பெறும் இளைஞர்களுக்கு பயிற்சிக்காலம் இதுவரை 6 மாதமாக இருந்தது. இது 9 மாதம் என உயர்த்தப்பட்டது. அவர்களுக்கு உணவுக்காகச் செலவிடப்படும் மாதாந்திரத் தொகை ரூ.3000 லிருந்து ரூ.4500ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

சென்னை அண்ணா நகரில் 4000 சதுர அடி பரப்பில் 200 மாணவர்கள் அமர்ந்து படிக்கும் வகையில் குளிரூட்டப்பட்ட படிப்பகம் 'நான் முதல்வன்' திட்டம் வாயிலாகத் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இவை அனைத்தையும் முறையாகச் செய்து கொடுத்ததால்தான் குடிமைப் பணித் தேர்வுகளில் தமிழ்நாட்டு மாணவர்கள் அதிகளவில் வென்று வருகிறார்கள்.

கடந்த ஆண்டு நிறையப் பேர் வென்றார்கள். இந்த ஆண்டு அதனையும் தாண்டி வருகிறார்கள். இப்படி வெற்றி பெறுபவர்களில் பலரும் தமிழ்நாடு அரசு சார்பில் நடத்தப்படும் 'நான் முதல்வன்' திட்டத்தின் கீழ் படித்தவர்களாக இருக்கிறார்கள். மாணவர்களின் தேர்ச்சி விகிதம் அதிகரித்திருக்கிறது.

இந்தியா முழுவதும் குடிமைப் பணிகளுக்காக 979 காலிப் பணியிடங்கள் உள்ளது. இத்தேர்வு எழுதியவர்களில் 2, 736 பேர் தேர்ச்சிபெற்றுள்ளார்கள். இதில்155 பேர் தமிழ்நாட்டைச்சேர்ந்தவர்கள். கடந்த ஆண்டு136 பேர் தேர்ச்சி அடைந்திருந்தார்கள். இதை ஒப்பிட்டால் கடந்த ஆண்டை விட தேர்ச்சி பெற்றோர் 13.9 விழுக்காடு அதிகம் ஆகும்.

இந்த 155 பேரில் 87 பேர், தமிழ்நாடு அரசால் நடத்தப்படும் 'நான் முதல்வன்' திட்டத்தில் சேர்ந்து படித்தவர்கள், பயன்பெற்றவர்கள். அதனால்தான், தகுதிப்படுத்தும் அரசு என்கிறோம்.

கடந்த ஆண்டு 'நான் முதல்வன்' திட்டத்தின் கீழ் பயின்றவர்கள் 48 பேர் தேர்ச்சியடைந்திருந்த நிலையில், இந்த முறை 37 பேர் கூடுதலாகத் தேர்ச்சியடைந்திருக்கின்றனர். தமிழ்நாட்டைப் பொறுத்தவரை மொத்த தேர்ச்சி விகிதம் கடந்த ஆண்டு 35.29 விழுக்காடாக இருந்தது. இந்த ஆண்டு 54.84 விழுக்காடாக உயர்ந்து விட்டது.

இது குறித்து பாராட்டுத் தெரிவித்திருக்கும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், "2025 ஆம் ஆண்டுக்கான யு.பி.எஸ்.சி. முதன்மைத் தேர்வில் (UPSC Mains 2025) தமிழ்நாடு மிகச் சிறப்பாகச் செயல்பட்டுள்ளது. இந்தச் சாதனை படைத்த அனைத்து தேர்வர்களும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலினின் தொலைநோக்குத் திட்டமான 'நான் முதல்வன்' திட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட உதவித்தொகை மற்றும் நிதி உதவியால் பயனடைந்தவர்கள் என்பதில் பெருமை கொள்கிறோம். 87 பேர், தமிழ்நாடு அரசின் கீழ் இயங்கும் அகில இந்திய குடிமைப் பணிகள் பயிற்சி மையத்தில் (AICSCC) பயிற்சி பெற்றவர்கள் ஆவர். 'இந்த குறிப்பிடத்தக்க வெற்றிகள், ஆண்டுதோறும் தமிழ்நாட்டில் இருந்து 100 குடிமைப் பணி அதிகாரிகளை உருவாக்குவதற்கான இலக்கை நோக்கி மாநிலம் நிலையான முன்னேற்றம் அடைந்து வருகிறது" என்று சொல்லி இருக்கிறார்.

இந்த ஆண்டு முதல் சிவில் சர்வீஸ் மெயின் தேர்வில் தேர்ச்சி பெற்ற தமிழ்நாட்டு மாணவர்களுக்கு 'நான் முதல்வன்' திட்டத்தின் கீழ் ரூ.50 ஆயிரம் ஊக்கத்தொகை வழங்கப்படும் என்று அரசு அறிவிப்பு செய்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் கடந்த ஆண்டு மட்டும் யு.பி.எஸ்.சி. முதல்நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்ற தமிழக மாணவர்கள் 659 பேருக்கு முதன்மைத் தேர்வுக்குப் பயிற்சி பெற ஏதுவாக ரூ.25 ஆயிரம் ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டது. இவர்களில் 155 பேர் முதன்மைத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளனர் என்பதுதான் இத்திட்டத்தின் வெற்றியாகும்.

சென்னை செனாய் நகர் பகுதியில் 500 மாணவர்கள் தங்கிப் பயிலக் கூடிய வகையில் அனைத்து நவீன வசதிகளுடன் ஒரு பயிற்சி மையம் 40 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

ஆண்டுதோறும் 100 குடிமைப் பணி அதிகாரிகளை உருவாக்கும் இலக்கை நோக்கி மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி சென்று கொண்டிருக்கிறார். இலக்கையும் தாண்டி வென்று காட்டுவார் என்பது உறுதி.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (13.11.2025) தலைமைச் செயலகத்தில், ரோமன் கத்தோலிக்க பேராயர்கள் சென்னை, மயிலாப்பூர் பேராயர் டாக்டர் ஜார்ஜ் அந்தோணிசாமி, தருமபுரி பேராயர் டாக்டர் லாரன்ஸ் பியஸ் துரைராஜ், செங்கல்பட்டு பேராயர் நீதிநாதன் அந்தோணிசாமி, கும்பகோணம் பேராயர் டாக்டர் ஜீவானந்தம் அமலநாதன், சிவகங்கை பேராயர் டாக்டர் லூர்து ஆனந்தம், அருட்தந்தை டாக்டர் ஏ.சேவியர் அருள்ராஜ், அருட்தந்தை அந்தோணிசாமி, அருட்சகோதரி டாக்டர் மரியா பிலோமி, அருட்சகோதரி வைதேகி, புனித தாமஸ் கதீட்ரல் பசிலிக்கா ரெக்டர் அருட்தந்தை வின்சென்ட் சின்னதுரை ஆகியோர் சந்தித்து பேசினர். இச்சந்திப்பின்போது, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம். நாசர், சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ், தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் நல ஆணையத்தின் தலைவர் அருட்தந்தை ஜோ அருண் ஆகியோர் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.11.2025) தலைமைச் செயலகத்தில், புற்றுநோய் தடுப்பு மற்றும் பராமரிப்பு திட்டத்தின் கீழ், மகளிர் நல்வாழ்விற்காக 40 கோடி ரூபாய் செலவில் 38 நடமாடும் மருத்துவ ஊர்திகள் அனுமதிக்கப்பட்டு, டிஜிட்டல் மேம்மோகிராபி, ECG கருவி, செமிஆட்டோஅனலைசர் (Semi autoanalyser) உட்பட பல வசதிகளுடன் 1.10 கோடி ரூபாய் செலவில் வடிவமைக்கப்பட்டுள்ள இந்த நடமாடும் மருத்துவ ஊர்தியை பார்வையிட்டார். உடன், அமைச்சர் மா. சுப்பிரமணியன் உள்ளார்.

## காஞ்சிபுரத்தில் ரூ.3 கோடி செலவில்

# புனரமைக்கப்பட்ட "அண்ணா பட்டு விற்பனை வளாகம்"!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, நவ. 15 -**

**காஞ்சிபுரத்தில் ரூ.3 கோடி செலவில் புனரமைக்கப்பட்ட அண்ணா பட்டு விற்பனை வளாகத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.11.2025) தலைமைச் செயலகத்தில், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை சார்பில் காஞ்சிபுரம், வள்ளல் பச்சையப்பன் சாலையில் அமைந்துள்ள காஞ்சிபுரம் அறிஞர் அண்ணா பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் அண்ணா பட்டு விற்பனை வளாகத்தை 3 கோடி ரூபாய் செலவில் புனரமைக்கப்பட்டு காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

தமிழ்நாட்டின் கைத்தறி தொழிலானது தொன்மையும், வரலாற்று பாரம்பரிய சிறப்பும், நுணுக்கமான பல்வேறு வேலைப்பாடுகளையும் கொண்டதாகும். கைத்தறி தொழிலில் தமிழ்நாடானது பிற மாநிலங்களுக்கு முன்னோடியாக விளங்குவதுடன், உலகளவில் பிரசித்தி பெற்ற இரகங்களான காஞ்சிபுரம் பட்டு, ஆரணி பட்டு, திருபுவனம் பட்டு மற்றும் பவானி ஜமக்காளம் போன்ற இரகங்களை உற்பத்தி செய்து வருகின்றது. தமிழ்நாட்டில் 1,112 கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு அரசின் சீரிய திட்டங்களின் வாயிலாக தொடர் வேலைவாய்ப்பும், உத்திரவாதமான கூலியும் உறுதி செய்யப்பட்டு வருவதுடன், நெசவாளர் நலத்திட்டங்கள் வாயிலாக பல்வேறு நலத்திட்டங்களும் அரசால் வழங்கப்பட்டு வருகின்றன.

**புனரமைக்கப்பட்ட அண்ணா பட்டு விற்பனை வளாகத்தை திறந்து வைத்தல்**

காஞ்சிபுரம் அறிஞர் அண்ணா பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் 1971ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, தொடர்ச்சியாக இலாபகரமாக செயல்பட்டு வருகிறது.

காஞ்சிபுரம், வள்ளல் பச்சையப்பன் சாலையில் உள்ள இச்சங்கத்திற்குச் சொந்தமான இடத்தில் அமைந்துள்ள அண்ணா பட்டு விற்பனை வளாகம், தமிழ்நாடு அரசின் கைத்தறி ஆதரவுத் திட்டத்தின் கீழ், 6597 சதுர அடி பரப்பளவில், 3 கோடி ரூபாய் செலவில் புனரமைக்கப்பட்டு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

இந்த விற்பனை வளாகத்தில் அறிஞர் அண்ணா பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் அசல் பட்டு மற்றும் சரிகை சேலைகள், ஆரணி பட்டு சேலைகள், திருபுவனம் பட்டு சேலைகள், கோவை மென்பட்டு சேலைகள். சேலம் வெண்பட்டு வேட்டிகள், அங்கவஸ்திரங்கள், திண்டுக்கல் Tie & Dye சேலைகள், பரமக்குடி பம்பர் காட்டன் சேலைகள். திருநெல்வேலி செடி புட்டா சேலைகள். விருதுநகர் அருப்புக்கோட்டை காட்டன் சேலைகள், நாகர்கோவில் காட்டன் வேட்டிகள், ஈரோடு பவானி ஜமக்காளம், போர்வை இரகங்கள், படுக்கை விரிப்புகள், வீட்டு உபயோக துணி இரகங்கள் உள்ளிட்ட கைத்தறி இரகங்கள் காட்சிப்படுத்தப்பட்டு விற்பனை மேற்கொள்ளப்படும். இவ்விற்பனை வளாகம் குளிர்சாதன வசதி மற்றும் வாகனங்கள் நிறுத்தும் வசதியுடன் புனரமைக்கப்பட்டுள்ளது. இவ்வளாகம் புனரமை க்கப்பட்டதன் மூலம் ஆண்டொன்றுக்கு 10 கோடி ரூபாய் அளவிற்கு விற்பனை மேற்கொள்ள வழிவகை ஏற்படும்.

இதில், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை செயலாளர் வே.அமுதவல்லி, கைத்தறித்துறை இயக்குநர் மகேஸ்வரி ரவிக்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## திருவாரூர் மாவட்டத்தில் ரூ.50 கோடியில்

# 2500 பேருக்கு வேலைவாய்ப்புடன் ஆடை உற்பத்தி அலகு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் திட்டத்திற்கான ஒப்பந்தம் கையெழுத்து!

**சென்னை, நவ. 15 -**

**திருவாரூர் மாவட்டத்தில் ரூ.50 கோடி முதலீட்டில் 2500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் SCM Garments பிரைவேட் லிமிடெட் நிறுவனம் (தி சென்னை சில்க்ஸ் குழுமம்) ஆடை உற்பத்தி அலகு அமைக்கும் திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டது.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று முன்தினம் (13.11.2025) தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்வில், திருவாரூர் மாவட்டத்தில் 50 கோடி ரூபாய் முதலீட்டில் 2500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், SCM Garments பிரைவேட் லிமிடெட் நிறுவனம் (தி சென்னை சில்க்ஸ் குழுமம்) ஆடை உற்பத்தி அலகு அமைக்கும் திட்டத்திற்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

தமிழ்நாட்டின் இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கவும், 2030க்குள் தமிழ்நாட்டின் பொருளாதாரம் 1 ட்ரில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு வளர்ச்சி பெறுவதற்கும், தேவையான முதலீடுகளை ஈர்ப்பதற்கும் தமிழ்நாடு அரசு பல்வேறு சிறப்பான முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறது. இவ்வரசு பொறுப்பேற்றதில் இருந்து, அனைவரையும் உள்ளடக்கிய சீரான மற்றும் பரவலான வளர்ச்சி என்பதில் சிறப்பு கவனம் செலுத்தி வருகிறது. மாநிலம் முழுவதும் உலகத் தரம் வாய்ந்த உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கி, அனைத்து மாவட்டங்களிலும் தொழில் வளர்ச்சி மேம்பட அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அந்த வகையில், திருவாரூர் மாவட்டத்தில், இந்த திட்டம் நிறுவப்பட உள்ளது குறிப்பிடத்தக்கது.

**SCM Garments பிரைவேட் லிமிடெட்!**

ஜவுளித் துறையில் முன்னணி நிறுவனமாக விளங்கும் SCM Garments குழுமத்தின் துணை நிறுவனமான SCM Garments பிரைவேட் லிமிடெட் நிறுவனம் (தி சென்னை சில்க்ஸ் குழுமம்), உலகப் புகழ் பெற்ற நிறுவனங்களை வாடிக்கையாளர்களாகக் கொண்ட ஆடைகள் தயாரிக்கும் நிறுவனமாகும்.

இந்நிறுவனம், 50 கோடி ரூபாய் முதலீட்டில் 2500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், திருவாரூர் மாவட்டத்தில் ஆடை உற்பத்தி அலகு அமைத்திட திட்டமிட்டுள்ளது. முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் நேற்று முன்தினம், இத்திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

இந்நிகழ்வின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, தலைமைச் செயலாளர், நா.முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி.அருண் ராய், வழிகாட்டி நிறுவனத்தின் செயல் இயக்குநர் மருத்துவர் திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கத் தலைவர் கே.எம். சுப்ரமணியன், SCM Garments நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் பி.பி.கே.பரமசிவம், செயல் இயக்குநர் கௌசிக் குமரன், திட்ட மேலாளர் ஸ்ரீநிவாசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.